**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 46/2020**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மூவேந்திரபாண்டியன் | தொழில் | : செயல் அலுவலர் |
| தந்தை பெயர் | : பாலகிருஷ்ணன் | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 47 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

**3.** நான் தற்போது நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 ஆனந்தன் நான் பணிபுரிந்த போது இளநிலை உதவியாளராக பணிபுரிந்தவர் என்றால் சரிதான். மேற்படி ஆனந்தன் இறந்துவிட்டதாக சாட்சி கூறுகிறார். ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு கடிதம் வந்ததா என்றால் இல்லை. ஆக்கிரப்பாளர்களை அகற்றுவதற்கு முன்பாக பொதுவாக நோட்டீஸ் கொடுப்பது விதி என்றால் சரிதான். இவ்வழக்கில் அவ்வாறு எதிரிக்கு அறிவிப்பு ஏதேனும் எங்கள் அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் சொல்லப்பட்ட தேசூர்பாட்டை சர்வே எண் 11/1 ல் அடங்கிய 37 ச.மீ அரசு புறம்போக்கு இடத்திற்கு எதிரி பெயரில் பி மெமோ வழங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. 2000 வருடத்தில் இருந்து 18.07.2018 வரையில் மேற்படி சர்வே எண்.11/1 ல் அடங்கிய 37 ச.மீ அரசு பாட்டை புறம்போக்கு இடத்தில் எதிரிதான் குடிசை கட்டி தொடர்ந்து குடியிருந்து வந்தார் என்றால் நான் பார்த்த சமயத்தில் 2018 ல் குடிசை வீடு இருந்தது. மேற்படி 37 ச.மீ. நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடம் என்றால்

சரியல்ல. அரசு பாட்டை புறம்போக்கு. மேற்படி 37 ச.மீ. இடமானது செஞ்சி பேரூராட்சிக்கு பெயரில் ஒதுக்கப்பட்ட இடம் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி எதிரி குடியிருந்த குடிசை வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருந்த உதவி ஆய்வாளர் ரகமதுல்லா என்பவர் கேட்டுக்கொண்டதின் பேரில் எதிரி குடியிருந்த வீட்டை அறிவிப்பு கொடுக்காமல் சட்டத்திற்கு புறம்பாக இடித்து அப்புறப்படுத்தினோம் என்றால் அங்கிருந்த குடிசையைத்தான் அப்புறப்படுத்தினோம். மேற்படி குடிசை வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றினோமா என்றால் இல்லை. செஞ்சி அமைச்சராக உள்ளவருக்கு உறவினராக உள்ள உதவி ஆய்வாளர் ரகமதுல்லாவுக்கு ஆதரவாக செயல்பட்டு ஆக்கிரமிப்பை நான் அகற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. சட்டவிரோதமாக எதிரியின் வீட்டை அகற்ற வந்த நிலையில் சட்டவிரோதமாக அகற்ற வேண்டாம் என்றுதான் எதிரி கேட்டுக்கொண்டார் என்றும் நான் கூறுவது போல் மிரட்டலோ, பணியை தடுத்தோ பிரச்சனை செய்யவில்லை என்றால் சரியல்ல. மஸ்தான் அவர்களின் அழுத்தத்தின் எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கூறியவாறு எதிரி எந்த செயலும் செய்யாத நிலையில் எதிரியை அலைகழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சட்டவிரோதமாக எதிரியின் குடிசையை அகற்றியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தனிப்பட்ட முறையில் ஆக்கிரமிப்பை அகற்ற எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.